(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2021 |
| Deposition Of Witness for | : | PW7 |
| Name | : | **Tmt.Jeyanthi** |
| Husband's Name | : | Thiru.Pandiarajan |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13th March 2026.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் கடந்த 03.08.2020 முதல் 09.02.2021 வரை காரைக்குடி வட்டாட்சியராக பணிபுரிந்தேன். தற்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தனி வட்டாட்சியராக (மறுவாழ்வு) பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.08.2020-ம் தேதி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் என்னிடம் இந்த வழக்கு தொடர்பான விபரங்கள் கேட்டு கடிதம் ஒன்றை கொடுத்தார். அது சம்பந்தமாக 02.09.2020-ம் தேதி ஆய்வாளர் கேட்ட விபரங்களை

குறித்து ஆய்வாளருக்கு அனுப்பினேன். அந்த கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கடிதத்துடன் முகவுரை மற்றும் அது உள்ளடங்கிய கோப்பு மொத்தம் 40 பக்கங்கள் கொண்டது**. அது **அ.த.சா.ஆ–10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அ.த.சா.ஆ.10 ல் ஆய்வாளர் கோரிய ஆவணங்களில் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் மண்டல துணைவட்டாட்சியர் அவர்களின் கடமை மற்றும் பொறுப்புகள் அடங்கிய அரசாணை நகலை இணைத்துள்ளேன்.

2. கணினி மூலமாக வருமான சான்றிதழ் கோரி விண்ணப்பித்த மனுவானது கிராம நிர்வாக அலுவலர் பரிந்துரையின் பேரில் வருவாய் ஆய்வாளருக்கு கணினி மூலமாகவே சமர்ப்பிக்கப்படும். வருவாய் ஆய்வாளர் அதனை பரிந்துரை செய்து மண்டல துணை வட்டாட்சியருக்கு அனுப்புவதுதான் வழக்கம். மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள்தான் வருவாய் சான்றிதழை வழங்குவார்.

3. இலுப்பக்குடி கிராமத்தில் குடியிருந்து வரும் முருகன் என்பவரின் மகன் சுப்பு என்பவரின் வருமான சான்றிதழ் கோரிய விண்ணப்பமானது கணினி வழியாகத்தான் கிராம நிர்வாக அலுவலரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களின்படி 13.02.2020–ம் தேதி மதியம் 2.05.56 மணியளவில்

வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா என்பவர் மண்டல துணை வட்டாட்சியர் அவர்களுக்கு பரிந்துரை செய்துள்ளார். மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் 2.06 மணிளவில் வருமான சான்றிதழ் வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளார்.

4. வருவாய் ஆய்வாளர திருமதி.ஜீவா அவர்கள் 2020ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குண்டான நாட்குறிப்புகளை சமர்ப்பிக்கவில்லை. இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.03.13 01:47:35 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.